**செ. கு. எண்:080** **நாள்: 08.06.2017**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 8.6.2017

வேலூர் மாவட்டம், ஆம்பூர் வட்டம், கீழ்முருங்கை கிராமத்தைச் சேர்ந்த திரு. ராதாகிருஷ்ணன் என்பவரின் மகன் திரு. பாண்டுரங்கன் என்பவர் **11.5.2017** அன்று பம்பு செட்டை இயக்க சென்ற போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருப்பூர் மாவட்டம், திருப்பூர் தெற்கு வட்டம் மற்றும் கிராமத்தைச் சேர்ந்த திரு. சுந்தரம் என்பவரின் மகள் செல்வி. லிட்வின் புனிதா என்பவர் **16.5.2017** அன்று மின் விளக்கு கம்பம் சாய்ந்து விழுந்ததில் பலத்த காயமடைந்து மருத்துவமனைக்கு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், பஞ்சுகாளிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு வெங்கடாசலம் என்பவரின் மகன் திரு பழனிசாமி என்பவர் **17.5.2017** அன்று மின் கம்பத்தில் ஏறி பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், கெஜல்நாயக்கன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. சுப்பிரமணி என்பவரின் மனைவி திருமதி சாவித்திரி என்பவர் **26.5.2017** அன்று தனது வீட்டின் அருகே அறுந்து கிடந்த மின் கம்பியை மிதித்ததில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், கவுண்டன்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு செங்கோடகவுண்டர் மகன் திரு சுப்பிரமணி என்பவர் **26.5.2017** அன்று மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு வட்டம், சங்கனூர் கிராமத்தைச் சேர்ந்த திரு பெனிடிக் லாரண்ஸ் என்பவர் மின் கம்பத்தில் பழுது

நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், குளப்புறம் கிராமத்தைச் சேர்ந்த திரு பாஸ்கரன் மின் கம்பி அறுந்து விழுந்ததில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

மின்சாரம் தாக்கி உயிரிழந்த மேற்கண்ட 7 நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**